வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி-15.7.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியில் இம்முறை பட்ஜெட் சிறப்பாக அமைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, இன்று கருவடிக்குப்பம் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டப வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் நினைவு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

நாட்டில் இதுவரை சுமார் 1 கோடியே 46 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக, மத்திய திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவன நாள் மற்றும் தொழில் நுட்ப தின விழா, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

*காமராஜர்*

புதுச்சேரியில் இன்று, பெருந்தலைவர் காமராஜரின் 122-ஆவது பிறந்த நாள் அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. காமராஜர் சாலை-

அண்ணா சாலை சந்திப்பில் உள்ள காமராஜர் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர் திரு சாய்சரவணன் குமார், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ்பி ரமேஷ், திரு நேரு என்ற குப்புசாமி, திரு லட்சுமி காந்தன். திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தியாகி முத்துகுமரப்ப ரெட்டியார் நினைவு நாளும், புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. நெட்டப்பாக்கம் காவல் நிலையம் அருகே உள்ள முத்துகுமரப்ப ரெட்டியார் சிலைக்கு, அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் சமுதாய நலன் ஒன்றையே சிந்தனையாக கொண்டு வாழ்ந்தவர் காமராஜர் எனப் புகழாரம் சூட்டினார். புதுச்சேரியில் பிரஞ்ச் ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டம் தொடக்கி, நெட்டப்பாக்கத்தை சுற்றி உள்ள 60

கிராமங்கள் சுதந்திர காற்றை சுவாசிக்க ஏதுவாக முதன்முதலில் தேசியக் கொடி ஏற்றிய பெருமைக்குரியவரான முத்துகுமரப்ப ரெட்டியார் மறைந்த நாளும், இதே புனிதநாள் என்று அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் இம்முறை பட்ஜெட் சிறப்பாக அமைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும், இரண்டொரு நாளில் மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு, இம்மாத இறுதிக்குள் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்றும் துணை நிலை ஆளுநர் தெரிவித்தார். பாதியில் நிற்கின்ற திட்டங்களை நிறைவேற்றி முடிக்கவும், ஒதுக்கப்படுகின்ற நிதி விரயமாகாமல் மக்களை சென்று சேரவும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். நேற்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சிறிது நேரம் மின்சாரம் தடைப்பட்டதால் சிறிது துர்நாற்றம் வெளிப்பட்டதை, பெரிய விஷ வாயுக் கசிவாக கருதியதே பரபரப்பு ஏற்படக் காரணம் என்றும் பிரச்சனை உடனடியாக கவனிக்கப்பட்டதாகவும் துணை நிலை ஆளுநர் கூறினார். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அப்புறப்படுத்துவது சாத்தியமல்ல என்றாலும், மாற்றுத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளதாகவும், அதன்பிறகு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அப்பகுதியில் இருந்து அகற்றப்படும் என்றும் அவர் தெவித்தார்.

நூலகம்

புதுச்சேரியில், கருவடிக்குப்பம் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டப வளாகத்தில் கலை-பண்பாட்டுத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள, பெருந்தலைவர் காமராஜர் நினைவு நூலகத்தை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று திறந்து வைத்தார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் தலைமையில், முதலமைச்சரின் பாராளுமன்ற செயலர் திரு ஜான்குமார் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், கலை-பண்பாட்டுத் துறை செயலர் திரு நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முதலமைச்சர் அறிவுறுத்தலின் பேரில் அமைக்கப்பட்டுள்ள இந்நூலகத்தில், வேலை வாய்ப்பு வழிகாட்டி நூல்களுக்கான பிரிவு, இன்டர்நெட் பிரிவு, பெண்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு உட்பட பல்வேறு பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. உறுப்பினர்கள் புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கும் வசதியுடன், மாணவர்கள் தங்களின் புத்தகங்களை நூலகத்திற்கு எடுத்து வந்து அமைதியான சூழலில் படிப்பதற்கான வசதிகளும் இந்நூலகத்தில் உள்ளன. இந்நூலகம், ரோமன்-ரோலண்ட் நூலகத்திற்கு அடுத்தபடியாக புதுச்சேரியின் 2-ஆவது பெரிய நூலகமாக மேம்படுத்தப்படும் என்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி விழாவில் பேசுகையில் கூறினார். காமராஜர் மணி மண்டபத்தில் ஏற்கனவே சென்டாக் அலுவலகம் செயல்பட்டு

வருவதாகவும் பரதநாட்டியம் கற்றுக் கொடுக்கும் வசதி உள்ளிட்ட வசதிகள் இங்குள்ள நிலையில் தற்போது நூலகம் தொடங்கப் பட்டுள்ளதாகவும் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கான இன்னும் பல வசதிகள் காமராஜர் மணி மண்டபத்தில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். காமராஜர் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள ஏதுவாக காமராஜர் பற்றிய புகைப்படங்கள் மற்றும் தகவல்களை மணி மண்டபத்தில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். தொழில் நுட்பம் எவ்வளவு தான் வளர்ந்தாலும் புத்தகத்தில் படிப்பது தான் மனதில் நிற்கும் என்பதால் மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான விலை உயர்ந்த புத்தகங்கள் இந்நூலகத்தில் வாங்கி வைக்கப்படும் என்றும், இது மாணவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

*பணவீக்கம்*

மொத்த விலைகளின் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த ஜுன் மாதத்தில், 3.36 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. மொத்த விலை பணவீக்கம் ஏறுமுகத்தில் இருப்பது, தொடர்ச்சியாக இது 4-ஆவது மாதமாகும். கடந்த வாரம் அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களின் படி, ஜுன் மாதத்தில், சில்லரை விலைகளின் அடிப்படையிலான பண வீக்கம்,

5.1 சதவிகிதமாக உயர்ந்து இருப்பதும், காய்கறி உள்ளிட்ட உணவுப் பொருட்கள், மற்றும், இதர உற்பத்தி பொருட்களின் விலை உயர்வே, பணவீக்கம் அதிகரிக்க காரணம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

திறன் மேம்பாடு

ஸ்கில் இண்டியா திட்டத்தின் கீழ் நாட்டில் இதுவரை சுமார் 1 கோடியே 46 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக, மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுத் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி தெரிவித்துள்ளார். இன்று உலக இளைஞர் திறன் தினத்தை ஒட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில் 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் பயணத்தில் திறன் மேம்பாட்டுத் துறையின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என்றார். திறன் மேம்பாட்டுத் துறையில் கடந்த 10 ஆண்டுகளில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் அமைச்சகம் மேலும் பல்வேறு பிரிவினருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வரும் என்றும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது, திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்த இளைஞர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார். சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்றுநர்களை, அவர் கவுரவித்தார்.

வேளாண்மை

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவன நாள் மற்றும் தொழில் நுட்ப தின விழா, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. இந்த 2 நாள் விழாவின் முதல் நாளான இன்று, மாணவர்கள் ICAR வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டு, வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. வேளாண் சார் புதுமைப் படைப்புகளின் கண்காட்சி ஒன்றையும் மாணவர்கள் பார்வையிட்டனர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவன நாள் நிகழ்ச்சியை, நாளை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சவ்கான, முறைப்படி தொடக்கி வைக்கிறார். வேளாண்துறை இணை அமைச்சர்கள் திரு பாகீரத் சவுத்ரி, திரு ராம்நாத் தாக்கூர் ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்க உள்ளனர். 100 நாட்களில் 100 புதிய பயிர் ரகங்கள், 100 நாட்களில் 100 புதிய தொழில்நுட்பங்கள், ஒரு விஞ்ஞானி-ஒரு பொருள் ஆகியன இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முக்கிய முன் முயற்சிகளாக இருக்கும் என்று ICAR தலைமை இயக்குநர் திரு ஹிமான்ஷு பாதக், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். மண் வளம், நீர்வள மேலாண்மை, இயற்கை விவசாயம், விதைத் தொழில் நுட்பம் மற்றும் வேளாண் கருவிகள் தொடர்பாக, அண்மைக் காலங்களில்

எட்டப்பட்டுள்ள பல முன்னேற்றங்களையும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

நேபாள்-வாழ்த்து

நேபாளத்தின் புதிய பிரதமராக, திரு கே பி சர்மா ஒலி இன்று பதவி ஏற்றுள்ளார். அவருக்கும், 21 அமைச்சர்களுக்கும் நேபாள அதிபர் திரு ராமசந்திர பவுடேல், பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். கடந்த வெள்ளிக்கிழமை, நேபாள பிரதமர் பதவியில் இருந்து திரு புஷ்பகமல் பிரச்சண்டா நீக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கூட்டணியின் சார்பில் திரு சர்மா ஒலி பிரதமராக பதவி ஏற்றுள்ளார். காட்மாண்டுவில் உள்ள நேபாள அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் துணை அதிபர் திரு ராம்சகாய பிரசாத் யாதவ், நேபாளி காங்கிரஸ் தலைவர் திரு ஷேர்பகதூர் தியுபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நேபாளத்தின் புதிய பிரதமருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். பரஸ்பர நன்மைக்கான இருதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்கம் செய்யவும், ஆழப்படுத்தவும், இணைந்து பாடுபட தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மோடி-சந்திப்பு

மேகாலயா முதலமைச்சர் திரு கான்ராட் சர்மா இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்தார். பிற்பகலில் ஜார்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரேனும், பிரதமரை சந்தித்துப் பேசினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று அசாம், குஜராத் மற்றும் உத்தரபிரதேஷ் முதலமைச்சர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வெள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்தார். மத்திய அரசிடம் இருந்து, இயன்ற எல்லா உதவிகளும் வழங்கப்படும் என அவர் உறுதி அளித்தார். இதற்கிடையே, தெற்கு குஜராத்தில் குறிப்பாக சூரத், பாரூச் மற்றும் நர்மதா மாவட்டங்களில் கனமழை பதிவாகி உள்ளது. சூரத் மாவட்டம் உமர்படா பகுதியில் இன்று காலை 2 மணி நேரத்தில் சுமார் 10 அங்குலம் அளவிற்கு மழை பெய்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், நடப்பு பருவத்திற்கான மொத்த மழையில் சுமார் 30 சதவிகிதம் ஏற்கனவே பெய்து விட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மகாராஷ்டிர மாநிலத்திலும் ரத்னகிரி, ராய்காட், ஜல்னா, அவுரங்கபாத் உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்து வருகிறது.

மழை

கொங்கண், கோவா,மகாராஷ்டிரா, குஜராத், கடலோரக் கர்நாடகா, மற்றும், தெற்கு உட்புற கேரளா, கர்நாடகாவில் அடுத்த 3 முதல் 4 நாட்களில் கனமழை முதல், அதிகனமழை பெய்யக் கூடும் என இந்திய

வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. இன்றைய தினம், உத்தராகண்ட். உத்தரபிரதேஷ் மற்றும் கிழக்கு ராஜஸ்தானில் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், அரியானா, உத்தரபிரதேஷ் மற்றும் டெல்லியில் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ரயில்-தாமதம்*

கொங்கண் ரயில்வேயின் ரத்தனகிரி மண்டலத்தில், மழையினால் ரயில் பாதையை ஒட்டி ஏற்பட்ட மண் அரிப்பு காரணமாக, ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. லோகமானிய திலக்-திருவனந்தபுரம் இடையிலான நேத்ராவதி எக்ஸ்பிரஸ், லோகமானிய திலக்-மங்களூர் எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. 2 ரயில்கள் பாதியில் நிறுத்தப்பட்டு, மேலும் 5 ரயில்கள் வேறுபாதையில் திருப்பி விடப்பட்டன. நவி மும்பையில் இருந்து, கொங்கண் ரயில்வே தலைமையக அதிகாரிகள், மண் அரிப்பு ஏற்பட்ட பகுதிக்கு நேரில் சென்று ரயில்பாதை சரிபடுத்தும் பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியில் இம்முறை பட்ஜெட் சிறப்பாக அமைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, இன்று கருவடிக்குப்பம் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டப வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் நினைவு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

நாட்டில் இதுவரை சுமார் 1 கோடியே 46 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக, மத்திய திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவன நாள் மற்றும் தொழில் நுட்ப தின விழா, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.